அதைச் செயல்படுத்தும் நிலை இருக்கிறது. எனவே, மேலும் இதை விரிவாக்கும் எண்ணம் தற்போது இல்லை. தேவையைப் பொறுத்து எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பெண்ணெய் பிழியும் ஆலை இருக்கும் இடம் ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வசிக்கும் தோக்கவாடி கிராமம். அவர்களுக்கு விவசாயத்தைத் தவிர, இந்த வேப்பெண்ணெய் பிழியும் ஆலைதான் வருவாயைப் பெற்றுத் தருகிறது. எனவே, அதிக அளவில் இன்னும் ஒரு யூனிட்டை ஏற்படுத்தி, தேங்கிக் கிடக்கும் அந்த வேப்பவிதைகளின் அளவைக் குறைக்க, அதிகப்படியாக ஒரு யூனிட்டை அங்கே அமைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கதர் வாரியத்திற்கு சொந்தமான வேப்பெண்ணெய் அரைக்கும் ஆலைகள் தமிழகத்திலே 3 இடங்களில் நடைபெற்று வருகின்றன. ஆண்டு முழுவதும் தமிழகத்திலே கிடைக்கப்பெறும், கதர் வாரியத்தின் மூலம் வாங்கப்படும் வேப்ப விதைகளை இந்த 3 ஆலைகளிலும் ஆண்டு முழுவதிலும் அரைப்பதற்குத் தேவையான வேப்ப விதைகள் சரியாகக் கிடைப்பது இல்லை. எனவே தேவையைக் கருதி எதிர்காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

பேரவைத் தலைவரின் முன்அனுமதியின்றி, ஒரு பிரச்சினையை எழுப்புதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. இளம்வழுதி, திரு. திருநாவுக்கரசு எதுவும் கொடுக்காமல் 2 பேரும் எழுந்திருக்கக் கூடாது. இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் எதுவும்

கொடுக்காமல், இதுமாதிரி எழுந்திருக்கக் கூடாது. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. திரு. த. க.. ராதாகிருஷ்ணன் மற்றும் டாக்டர் மு. காளிராஜன் ஆகியோர்ரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி.கே. ராதாகிருஷ்ணன், (குறுக்கீடு) இது முறையல்ல. பரிதி, என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்னிடம் ?.

திரு. இளம்வழுதி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், எதுவும் அவைக்குறிப்பிலே இருக்காது. நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) தினசரி இதுமாதிரி செய்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? உட்காருங்கள், நாள்தோறும் இதுமாதிரி வந்து அதிகமாக நீங்கள் உரிமையை எடுத்துக் கொள்ளக் கூடாது. இது முறையல்ல. முறைகேடாக நடக்கக்கூடாது. காலையில் என்னைச் சந்தித்து இதைப்பற்றி கிளப்பப்போகிறேன் என்று சொன்னீர்களா? (குறுக்கீடு)

திரு. இளம் வழுதி: நான் காலையிலே எப்போதும் சீக்கிரமாக வந்து உங்களை அறையில் சந்திப்பேன். இன்று தாமதமாக வந்தேன். அதனால் சந்திக்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்போதும் முறைகேடாக நடப்பதை திரு. இளம் வழுதி தொழிலாக வைத்துக் கொள்ளக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காரவும். முறைகேடாக நடந்து கொள்வதை நான் அனுமதிக்க முடியாது. நாள்தோறும் இப்படி முறைகேடாக நடந்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இப்படி நாள்தோறும் முறைகேடாக நடந்தால் நான் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. இளம் வழுதி, இது முறையற்ற போக்கு; உட்காருங்கள்.

3. கவன ஈர்ப்பு

(அ) திருமங்கலம் தாலுகா அரசு மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சைக் கூடம் இயங்கவேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு த.க. ராதாகிருஷ்ணன்.

திரு. த.க. இராதாகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தாலுகா அரசு மருத்துவமனையில் உள்ள அறுவை

** **மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**